செ.வெ.எண்: 47 நாள்: 10.07.2019

**தூத்துக்குடி தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மீன் வளர்போர் தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் சிறந்த மீன் உற்பத்தியாளர்களுக்கு விருதுகளை வழங்கினார்.**

---

தூத்துக்குடி தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை ஆகிய துறைகள் இணைந்து மீன் வளர்போர் தின விழா இன்று (10.07.2019) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை சேர்ந்த 6 சிறந்த மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் சிறந்த அலங்கார மீன் உற்பத்தியாளர்கள் 6 நபர்களுக்கு விருதுக்கான கேடயங்களை வழங்கினார்.
நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

தேசிய அளவில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 10ம் தேதி தேசிய மீன் வளர்ப்போர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதனையொட்டி மீன் வளர்போருக்கு தேவையான பயிற்சிகள் மற்றும் மீன் உற்பத்தி அதிகரிப்பது தொடர்பான தொழில்நுட்பங்களை கையாளுவது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் தேசிய மீன் வளர்ப்போர் தினத்தையொட்டி திருநெல்வேலி - தூத்துக்குடி மாவட்டத்தில் மீன் வளர்போருக்கு 2 நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. நமது நாட்டின் மக்கள் தொகை 120 கோடி உள்ளது. இதில் அசைவ உணவு சாப்பிடுபவர்கள் அதிகம் உள்ளனர். மேற்குவங்காளத்தில் மீன் உணவு சைவமாக உள்ளது. மீன் உணவில் ஊட்டச்சத்து அதிகம் இருப்பதால் மருத்துவர்கள் அதிக மீன்கள் சாப்பிடுமாறு கூறுகின்றனர். உலக அளவில் ஒரு நபர் சராசரியாக ஆண்டிற்கு 20 கிலோ மீன்களை உணவில் சேர்த்துக்கொள்கிறார்கள். நம் நாட்டில் இது ஒரு நபருக்கு சராசரியாக 9 கிலோவாக உள்ளது. மீன் தேவையை கருத்தில்கொண்டு அதிக உற்பத்தி செய்வது அவசியமாகிறது. இதுதொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகிறது. மீன் வளர்போர் இந்த பயிற்சியை நல்ல முறையில் பயன்படுத்திட வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மூலம் 223 நீர் பாசன குளங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஊராட்சி அளவில் 562 குளங்கள் உள்ளது. தாமிரபரணி ஆற்றின் மூலம் திருவைகுண்டம், சாயர்புரம், ஆறுமுகநேரி ஆகிய பகுதிகளில் மீன் வளர்போருக்கு தேவையான தண்ணீர் உள்ளது. அக்டோபர், நவம்பர் மாதத்தில் தாமிரபரணி ஆற்றில் அதிக நீர்வரத்து மூலம் விவசாயிகளுக்கு தேவையான தண்ணீர் கிடைக்கும். இக்குளங்களிலும் மீன் வளர்க்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். மீன் வளர்போருக்கு மத்திய, மாநில அரசுகள் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாய நிலங்களில் சிறு குட்டைகள் அமைத்து மீன் வளர்த்து வருமானம் ஈட்டலாம். மீன் வளர்போர் இந்த 2 நாள் பயிற்சியில் தொழில்நுட்பத்தில் உள்ள அனைத்து சந்தேகங்களையும் கேட்டு தெரிந்துகொள்ளலாம். அரசின் திட்டங்களையும் தெரிந்துகொண்டு அவைகளையும் பெற்று மீன் வளர்போர் அதிக வருமானம் ஈட்ட பயன்படுத்திகொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (மீன் வளத்துறை) திருமதி.சந்திரா, தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி முதல்வர் (பொ) திரு.வேலாயுதம், பேராசிரியர் திரு.நூர்மீரான், உதவி இயக்குநர் (மீன் வளத்துறை) திருமதி.பாலசரஸ்வதி மற்றும் மீனவர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.